பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 17 செவ்வாய்க்கிழமை 01.03.2022 கதிர் 342

## இரு இளைஞர்கள் நீரிழ் மூழ்கிப் பலி!

வெல்லவாய, எல்லாவல நீர்வீழ்ச்சிக்கு நீராடச் சென்ற இருவர் நீரில் மூழ்கி பலியாகியுள்ளனர்.

இந்தத் துயர் சம்பவம் இன்று முற்பகல் இடம்பெற்றுள்ளது.

அக்கரைப்பற்றுப் பகுதியைச் சேர்ந்த 21 மற்றும் 22 வயதுடைய இரு இளைஞர்களே இவ்வாறு பலியாகியுள்ளனர்.

## திருமலையில் கோர விபத்து; வணபிதாவும் சாரதியும் சாவு

### சொகுசு காரை நொறுக்கியது கனரக வாகனம்





ஹொரவ்பொத்தானை - திருகோணமலை வீதியில் இடம்பெற்ற கோர விபத்தில் வணபிதாவும் சாரதியும் பலியாகினர்.

இந்தச் சம்பவம் இன்று காலை இடம்பெற்றது.

ஹொரவ்பொத்தானை நோக்கி மணல் ஏற்றிச் சென்ற கனரக வாகனமும் திருகோணமலை நோக்கி வந்த சொகுசு காரும் ☞2

# இலங்கை தொடர்பில் வியாழனன்று விவாதம்

### ஆதரவு திரட்டுவதில் அரசு தீவிரம்

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 49ஆவது கூட்டத் தொடர் நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பமானது. இந்தக் கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான விவாதம் நாளைமறுதினம் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. இந்நிலையில், இலங்கைக்கு ஆதரவான நாடுகளின் ஒத்துழைப்புடன் தமக்கான நீதியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை உள்ளது என அரசு தெரிவித்துள்ளது.**

**இலங்கை தொடர்பான விவாதத்துக்கு முன்னோடியாக அதனை வெற்றிகரமாக எதிர்கொள்வது தொடர்பில் முக்கிய பேச்சு நேற்று ஜெனிவா நகரிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் நடைபெற்றது.** ☞2



## நாளை ஏழரை மணி நேரம் மின் வெட்டு

நாட்டில் நாளை ஏழரை மணித்தியால மின் வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது எனப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

மின்சார உற்பத்திக்குத் தேவையான எரிபொருள் பற்றாக்குறையால் மின் வெட்டை அமுல்படுத்த அனுமதி வழங்குமாறு இலங்கை மின்சார சபை விடுத்த கோரிக்கைக்கே பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கமைய, சி வலயத்துக்கு காலை 8 மணிமுதல் பிற்பகல் 1 மணி வரையும், F வலயத்துக்கு பிற்பகல் 1 மணிமுதல் மாலை 6 மணி வரையும் மின் வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

இதேவேளை, மாலை 6 மணிமுதல் 8.30 மணிவரை E வலயத்துக்கும், இரவு 8.30 மணி முதல் இரவு 11 மணிவரை F ☞2

## பிள்ளைகளுக்கு உணவு இல்லை; விரக்தியில் தந்தை தற்கொலை!

### களுத்துறையில் சோகம்

மூன்று நாள்களாக உணவு சமைப்பதற்கு வீட்டில் எதுவுமே இருக்கவில்லை. பிள்ளைகளுக்கு உணவுக்கு ஏதாவது தேடி வருவதாக கூறி, கணவர் வீட்டிலிருந்து சென்றார். எனினும், அவர் திரும்பி வரவில்லை. இதையடுத்து வீட்டிலிருந்து ☞2

## ஆறாவது நாளாகவும் தொடர்கின்றது போர்; உக்ரைனில் குவியும் ஐரோப்பிய ஆயுதங்கள்



ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள 3 நாடுகள், 70 போர் விமானங்களை வழங்கவுள்ளன என்று உக்ரைன் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா தொடுத்த போர் இன்று 6ஆவது நாளாக நீடித்து வருகின்றது. சர்வதேச அளவில் பல்வேறு உலக நாடுகள் கடும் கண்டனங்களைத் தெரிவித்தபோதும், உக்ரைனுக்கு எதிரான படையெடுப்பில் இருந்து ☞2

## திருநெல்வேலி திருவிழாவில் 4 தங்கச் சங்கிலிகள் அறுப்பு!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்., திருநெல்வேலி வழுங்கத் தடை காளி கோயில் தேர்த் திருவிழாவின்போது பக்தர்கள் நான்கு பேருடைய 4 தங்கச் சங்கிலிகள் அறுக்கப்பட்டன என்று தெரியவருகின்றது.

இன்று இந்த ஆலயத்தில் தேர்த்திருவிழா இடம்பெற்றுக் ☞2



## உடுப்பிட்டியில் கையெழுத்து வேட்டை



(எஸ்.நிதர்ஷன்)

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு எதிராகக் கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் இன்று யாழ்., உடுப்பிட்டியில் முன்னெடுக்கப்பட்டது.

26ஆவது நாளாக இன்று காலை 9.30 மணியளவில் உடுப்பிட்டி பொதுச் சந்தைக்கு ☞2



## பிள்ளைகளுக்கு உணவு இல்லை; ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரு கதிரைகளை விற்பனை செய்து விட்டு, பிள்ளைகளுக்கு உணவு சமைத்துக்கொடுத்தேன்.

- இவ்வாறு வாக்குமூலம் அளித்துள்ளார், பிள்ளைகளுக்கு உணவு கொடுக்க முடியாத கவலையில் தற்கொலை செய்துகொண்டார் எனக் கூறப்படும் நாகராஜா ரஞ்ஜனின் மனைவியான மாடசாமி மஞ்சுளா.

வெலிபென்ன சட்ட வைத்திய அதிகாரி நிஹால் ஜயநெத்தி முன்னிலையிலேயே அவர் இவ்வாறு வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

களுத்துறை, வெலிபன்ன பகுதியியைச் சேர்ந்த 37 வயதான நாகராஜா ரஞ்ஜன்என்பவரேஇவ்வாறுதற்கொலை செய்துகொண்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

எங்களுக்கு திருமணம் முடிந்து 14 ஆண்டுகள் ஆகின்றன. 12 வயதுக்கு குறைவான 4 பிள்ளைகள் உள்ளனர். மூன்று மகன்களும், ஒரு மகளும் எனக்கு உள்ளனர். நாங்கள் தெமுவத்த மற்றும் நெபட ஆகிய பகுதிகளிலிருந்து 9 மாதங்களுக்கு முன்னர் தொழில் தேடி, வெலிபென்ன பகுதிக்கு வருகை தந்தோம்.

கணவருக்கு நிரந்தர தொழில் இருக்கவில்லை. கூலித் தொழில் செய்து, அதில் கிடைக்கும் பணத்திலேயே வாழ்க்கையைக் கொண்டு நடத்தினோம்.

3 ஆயிரத்து 500 ரூபாவுக்கு வாடகைக்குப் பெற்றுக்கொண்ட ஒரு அறையொன்றிலேயே வாழ்ந்து வந்தோம்.

நிரந்தர பதிவு இல்லாமையால், பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பகூட முடியவில்லை எனவும் மஞ்சுளா கண்ணீர்மல்க குறிப்பிட்டுள்ளார்.

எனது கணவர் வெலிபன்ன பகுதியிலுள்ள காணியொன்றைத் துப்பரவு செய்யும் குத்தகையைப் பெற்றுக் கொண்டபோது, அதற்கான பணம் உரிய வகையில் கிடைக்கவில்லை. அதன்பின்னர் கணவருக்கு எந்தவொரு தொழிலும் கிடைக்கவில்லை.

கடந்த மூன்று நாள்களாக பிள்ளைகளுக்கு உணவு கொடுக்க முடியாமையால், கணவர் மன வேதனையில் இருந்தார்.

பிள்ளைகளுக்கு ஏதாவது கொண்டு வருகின்றேன் எனக் கூறிச் சென்றார். ஆனால், உறவினர் ஒருவரின் வீட்டுக்கு அருகில் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

பிள்ளைகளுக்கு உணவு வழங்க முடியாமையால், கணவர் தற்கொலை செய்து கொண்டார். தற்போது நானும், எனது பிள்ளைகளும் தனியாகி விட்டோம். பிள்ளைகள் சிறுவர்கள் என்பதால், எனக்கு வேலைக்குச் செல்ல முடியாது. எனது பிள்ளைகள் மேலும் நிர்க்கதியாகி விட்டார்கள் எனவும் அவர் விவரித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வெலிபென்ன பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## திருநெல்வேலி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்த வேளை அங்கு கூடியிருந்த நான்கு பேருடைய தங்கச் சங்கிலிகள் அறுக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து ஆலயத்துக்கு வருகை தந்த மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் சிலரைப் பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தி வருகின்றனர்.

## நாளை ஏழரை மணி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலயத்துக்கும் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

T,U,V,W ஆகிய வலயங்களுக்குட்பட்ட இடங்களில் காலை 8 மணிமுதல் பிற்பகல் 1 மணி வரையான காலப்பகுதியில் 5 மணி நேர மின்வெட்டும், P,Q,R,S வலயங்களில் பிற்பகல் 1 மணிமுதல் மாலை 6 மணி வரை மின்வெட்டும் அமுல்படுத்தப்படவுள்ளது.

அத்துடன், மாலை 6 மணிமுதல் இரவு 8.30 மணிவரை T,U,V,W வலயங்களுக்கும், இரவு 8.30 மணிமுதல் இரவு 11 மணிவரை P,Q,R,S வலயங்களுக்கும் மின் வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது எனவும்ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## ஆறாவது நாளாகவும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரஷ்யா பின்வாங்கத் தயாராக இல்லை.

ஒருபுறம் பேச்சு நடத்த உக்ரைனுக்கு அழைப்பு விடுத்தபோதும், அணு ஆயுதங்களைப் பயன்படுத்த உத்தரவு, படைகள் குவிப்பு, எல்லைகளை முற்றுகையிடுதல் போன்ற செயல்களில் ரஷ்யா இறங்கியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளான பிரான்ஸ், இங்கிலாந்து, ஜேர்மனி, போர்ச்சுக்கல், இத்தாலி, ருமேனியா, நெதர்லாந்து, டென்மார்க் செக்குடியரசு மற்றும் அமெரிக்கா, கனடா, இஸ்ரேல் ஆகியவை இராணுவ உதவிகளை உக்ரைனுக்கு அளித்துள்ளன.

இந்நிலையில், ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள 3 நாடுகள் 70 போர் விமானங்களை உக்ரைனுக்கு வழங்குகின்றன. பல்கேரியா 30, போலந்து 28, சுலோவாக்கியா 12 ஆகிய 3 நாடுகள் 70 போர் விமானங்களை வழங்கவுள்ளன என்று உக்ரைன் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதேபோல் உக்ரைனுக்கு ஆயுதங்களை வழங்குவதாக ஆஸ்திரேலிய அரசும் அறிவித்துள்ளது.

## உடுப்பிட்டியில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்பாக இடம்பெற்ற கையெழுத்துப் போராட்டத்தில் பலரும் கலந்துகொண்டு கையெழுத்துக்களைப் பதிவு செய்தனர்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன், தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு கையெழுத்துக்களைப் பதிவு செய்தனர்.

## இலங்கை தொடர்பில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பூகோள இலங்கை பேரவை மற்றும் ஐரோப்பிய நாடுகளிலுள்ள இலங்கையர்கள் அமைப்பின் பிரதிநிதிகளுடன் இலங்கையிலிருந்து சென்றிருந்த வெளிநாட்டமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தலைமையிலான அரச தூதுக்குழு இந்தப் பேச்சை நடத்தியிருந்தது.

இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் தொடர்பிலும், அதற்கு வெற்றிகரமாகப் பதிலளிப்பது தொடர்பிலும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது என இலங்கை தூதுக்குழுவில் அங்கம் வகிக்கும் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அரசின் சார்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் விடயங்களை முன்வைப்பதற்காக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ், நீதி அமைச்சர் அலி சப்ரி, இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே ஆகியோர் தயார் நிலையில் உள்ளனர்.

இம்முறை கூட்டத்தொடரில் இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் எழுத்துமூல அறிக்கையை சமர்ப்பித்துள்ள நிலையில் அது தொடர்பான விவாதம் நாளைமறுதினம் நடைபெறவுள்ளது.

கடந்த வருடம் பெப்ரவரி 22ஆம் திகதி முதல் மார்ச் 24ஆம் திகதி வரை நடைபெற்ற 46 ஆவது கூட்டத் தொடருக்கு இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை தொடர்பில் (46/1)அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

அதன்போது இலங்கையின் மனித உரிமைகள் நிலைமைகள் தொடர்பில் 49ஆவது கூட்டத் தொடரில் எழுத்துமூல அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு பரிந்துரை செய்யப்பட்டுள்ள நிலையில் அது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## திருமலையில் கோர .....



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேருக்கு நேர் மோதியதில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காரில் பயணித்த இருவரும் சம்பவ இடத்திலேயே மரணமாகினர்.

திருகோணமலை, அன்புவளிபுரம் சகாய மாதா ஆலயத்தின் பங்குத் தந்தை கணேசபிள்ளை நிதிதாசன் (வயது 49) என்பவரும், கார் சாரதியுமே மரணமானார்கள்.

மரணமான பங்குத்தந்தை முன்னர் கிழக்கிலங்கை மனிதாபிமான பொருளாதார அபிவிருத்தி (எஹெட்) நிறுவனத்தின் திருகோணமலைப் பணிப்பாளராகவும் சேவையாற்றியிருந்தார்.

மணல் ஏற்றி வந்த கனரக வாகனத்தின் சாரதி கைதுசெய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் ஹொரவ பொத்தானை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள 076 443 8619 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

# நெருக்கடி கால வர்த்தகம்

மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதை போன்றாகியிருக்கின்றது இலங்கையின் நிலைமை.

ஏற்கனவே கொவிட் பேரிடர் தந்த பெரும் பாதிப்பு மற்றும் பின்னடைவு நிலைமையை 'கோட்டாபய ராஜபக்ஷ அண்ட் கம்பனி'யின் நிர்வாகம் மேலும் மோசமடையச் செய்து குட்டிச் சுவராக்கியிருந்தது.

அந்த மோச நிலையை மேலும் மோசமாக்கியிருக்கின்றது உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு யுத்தம்.

இந்த யுத்தத்தில் எந்த வழியிலும் சம்பந்தப்படாத தரப்புத்தான் இலங்கை.

யுத்தம் நடப்பது ஐரோப்பாவில். இலங்கை இருப்பதோ ஆசியாவில். அங்கு [பனையில்] தேள் கொட்டியதற்கு இங்கு [தென்னையில்] நெறி கட்டுகின்றது என்பதுதான் நிலைமை.

நாம் இப்பத்தியில் ஏற்கனவே சுட்டிக்காட்டியமை போன்று கொரோனாப் பேரிடரினால் முழுமையாகப் படுத்துவிட்ட இலங்கையின் சுற்றுலாத்துறையை மீள உயிர்ப்பித்துத் தூக்கி நிறுத்தியமையில் இப்போது யுத்தத்தில் இறங்கியுள்ள ரஷ்யா மற்றும் உக்ரைனின் பங்களிப்பு கணிசமானது.

இந்த வருடத்தில் இதுவரை இலங்கைக்கு வருகை தந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளில் கால்வாசிப் பேர் – இருபத்தியைந்து வீதத்தினர் – இந்த இருநாட்டையும் சேர்ந்தவர்கள்தான் என்று புள்ளி விவரத் தகவல்கள் கூறுகின்றன. அவற்றுக்கு அருகில் இருக்கும் பெலாரஸ் மற்றும் போலந்து நாட்டின் சுற்றுலாப் பயணிகளையும் சேர்த்தால் இந்த விகிதம் முப்பது வீதத்தைத் தாண்டும்.

அப்படி என்றால் இந்த யுத்தம் வெடித்தமையை அடுத்து இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை மீண்டும் கணிசமாக வீழப்போகின்றது. அதுவும் மூன்றில் ஒரு பங்கு வீழ்ச்சியாக அது அமையப் போகின்றது.

அத்தியாவசிய உணவுப் பொருள்கள், மருந்துகள், எரிபொருள்கள் போன்றவற்றை இறக்குமதி செய்வதற்கே அந்நியச் செலாவணிக் கையிருப்பின்றி அல்லாடும் இலங்கைக்கு, சுற்றுலாத்துறை மூலம் ஈட்டக் கூடிய கொஞ்ச நஞ்ச அந்நியச் செலாவணி வருமதியிலும் இந்தத் திடீர் யுத்தம் ஆப்படித்திருக்கின்றது என்பதே உண்மை நிலைமை.

ஏற்கனவே இப்பத்தியில் நாம் சுட்டிக்காட்டியபடி இலங்கைக்கு அந்நியச் செலாவணியை ஓரளவுக்காவது ஈட்டித் தரும் துறைகளில் ஒன்று தேயிலை ஏற்றுமதியாகும்.

இலங்கைத் தேயிலையை வாங்கும் வெளிநாடுகளில் கடந்த வருடம் வரை மூன்றாம் இடத்தில் இருந்த ரஷ்யா இந்த ஜனவரியில் இரண்டாம் இடத்துக்கு முன்னேறியிருந்தது.

வெடித்துள்ள மோசமான யுத்தத்தினாலும், ரஷ்யா மீது அமெரிக்கா உட்பட்ட மேற்கு நாடுகள் விதித்துள்ள கடுமையான பொருளாதாரத் தடை காரணமாகவும் இனிமேல் ரஷ்யாவுக்குத் தேயிலையை இலங்கை ஏற்றுமதி செய்ய வாய்ப்புக் கிட்டுமா என்பது சந்தேகத்துக்கு உரியதாகியுள்ளது.

எனினும் இலங்கையில் யுத்தம் நடந்த சமயத்தில் அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்திருந்த வடகொரியாவுடன் இலங்கை கறுப்புச் சந்தைப் பணப்பரிமாற்றம் மூலம் ஆயுதக் கொள்வனவில் கூட ஈடுபட்டது என்ற உண்மையைத் தற்போதைய நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவே வெளிப்படுத்தியுள்ளார்.

அது போன்ற ஒளி மறைவு வர்த்தகங்களில் இந்த யுத்த சந்தடியைப் பயன்படுத்தி ரஷ்யாவுடன் கொழும்பு ஈடுபட்டாலும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை. இன்றைய நிலையில் நெருக்கடியில் சிக்கியிருக்கும் ரஷ்யாவும் இலங்கையும் தவித்த முயல் அடித்த மாதிரி தமக்குள் இரகசிய வர்த்தகங்களில் ஈடுபட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.



# யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் பெண் உறுப்பினர்களுக்கான பயிற்சி நிறைவு

யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் பெண் உறுப்பினர்களுக்குத் தேவைகளைக் கண்டறிதல் மற்றும் வளங்களை அடையாளப்படுத்தல் பற்றிய தொடர் பயிற்சியின் இறுதி நிகழ்வு நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்றது.

யாழில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் காலை 9.30 மணியளவில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த ஒன்பது பிரதேச சபை மற்றும் நகர சபைகளைச் சேர்ந்த பெண் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

பிரதேச சபை மற்றும் நகரசபைத் தவிசாளர்கள் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்வு கற்றல் மற்றும் தலைமைத்துவத்தில் பெண்கள் எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி மன்றப் பெண்களின் இயலுமையை விருத்தி செய்யும் நோக்கத்துடன் முன்னெடுக்கப்பட்டது.

உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனம், சேர்ச் போர் கொமன்ட் கிரவுண்ட் நிறுவனம், மகளிர் அபிவிருத்தி நிலையம் ஆகியன இணைந்து இந்நிகழ்வை ஒழுங்கமைத்திருந்தன.

# அரச நிதியை முறையற்ற விதத்தில் பயன்படுத்தினார்; குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டார் அமைச்சர் பஸில்



மற்றுமொரு குற்றச்சாட்டிலிருந்து நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அரச நிதியை முறையற்ற விதத்தில் பயன்படுத்திய குற்றச்சாட்டு தொடர்பில் கடுவளை நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலிருந்தே அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த வழக்கை தொடர்ந்து முன்கொண்டு செல்ல முடியாது என சட்டமா அதிபர் திணைக்களத்தால் மன்றுக்கு அறிவிக்கப்பட்டமைக்கு அமைய, பிரதிவாதியாகப் பெயர் குறிப்பிடப்பட்ட நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ வழக்கிலிருந்து விடுவித்து விடுதலை செய்யப்பட்டுள்ளார். திவிநெகும திணைக்களத்தின் நிதியை முறையற்ற வகையில் கையாண்டமை தொடர்பிலேயே அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# ஐரோப்பாவிலுள்ள இலங்கை அமைப்பு பிரதிநிதிகளை சந்தித்த ஆளும் தரப்பு

அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன ஆகியோர், குளோபல் ஸ்ரீலங்கா மன்றம் மற்றும் ஐரோப்பாவிலுள்ள இலங்கை அமைப்பின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசியுள்ளனர்.

ஜெனிவாவிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் நேற்று (திங்கட்கிழமை) இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்துக்கு முன்னதாக இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாக இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

இதன்போது, மேற்படி சந்திப்பில் இலங்கைக்கு எதிரான ஜெனிவா பிரேரணை உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது.

# மின்சார சபைக்கு எரிபொருள் பெற்றுக்கொள்ளும் மாற்றுமுறைகள் தொடர்பிலும் கலந்துரையாடல்



மின்சார சபைக்கு எரிபொருளை பெற்றுக் கொள்ளும் மாற்றுமுறைகள் தொடர்பில் ஆராயும் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.


மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காமினி லொக்குகே தலைமையில் நேற்று (திங்கட்கிழமை) இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இது தொடர்பான கலந்துரையாடலில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஐ.ஓ.சி. நிறுவனத்தின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# புடினுடன் பிரான்ஸ் அதிபர் பேச்சு தாக்குதலை நிறுத்த வேண்டுகோள்





பிரான்ஸ் அதிபர் எமானுவேல் மக்ரோங், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினுடன் தொலைபேசியில் பேசி உக்ரேன் மீதான தாக்குதலை நிறுத்துமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

அதே சமயம், ரஷ்யாவின் நலன்களை கவனத்தில் கொண்டால் மட்டுமே இந்த நெருக்கடிக்கு தீர்வு காண முடியும் என்றும் புடின் அவரிடம் பேசினார் எனத் தெரிய வருகிறது.

இந்த இரு தலைவர்கள் இடையிலான தொலைபேசி உரையாடல் குறித்து பிரான்ஸ் அதிபர் மாளிகை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், உடனடி போர் நிறுத்தத்தின் அவசியத்தை எமானுவேல் மக்ரோங் புதினிடம் வலியுறுத்தினார் என்று கூறப்பட்டுள்ளது.

பொதுமக்கள் மற்றும் குடியிருப்புப் பகுதிகள் மீதான தாக்குதல்களை நிறுத்துமாறு ரஷ்ய அதிபரிடம் அதிபர் மக்ரோன் கேட்டுக் கொண்டார். பொதுமக்கள் வசிக்கும் இடங்கள் மற்றும் முக்கிய சாலைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும், என்று மக்ரோங் கேட்டுக் கொண்டார் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கோரிக்கையை பரிசீலிக்க புடின் விருப்பம் தெரிவித்துள்ளார் எனவும் அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## ரஷ்ய விமானங்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம் தடை



ரஷ்ய விமானங்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம் தடை விதித்துள்ளதாக ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் அறிவித்துள்ளார். 'ரஷ்யாவிற்கு சொந்தமான, ரஷ்ய பதிவு செய்யப்பட்ட அல்லது ரஷ்ய கட்டுப்பாட்டில் உள்ள விமானங்களுக்கான ஐரோப்பிய ஒன்றிய வான்வெளியை நாங்கள் மூடுகிறோம்' என்று அவர் தெரிவித்துள்ளார்.

தன்னலக்குழுக்களின் தனியார் ஜெட் விமானங்கள் உட்பட, அத்தகைய அனைத்து விமானங்களும் இப்போது எந்த ஐரோப்பிய ஒன்றிய நாட்டிலும் தரையிறங்கவோ, புறப்படவோ அல்லது பறக்கவோ முடியாது.

பிரித்தானிய வான்வெளியில் ரஷ்ய விமானங்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து, ரஷ்யாவின் மிகப்பெரிய விமான நிறுவனமான எயிரோ ப்ளோட், ஞாயிற்றுக்கிழமை பழிவாங்கும் நடவடிக்கையில் மறு அறிவிப்பு வரும் வரை ஐரோப்பிய இடங்களுக்கான அனைத்து விமானங்களையும் ரத்து செய்வதாகக் கூறியது.

இந்த முடிவுக்கு முன்னதாக, ஐரோப்பிய நாடுகள் தங்கள் வான்வெளியை ஒவ்வொன்றாக மூடிக் கொண்டிருந்தன. ஜேர்மனி தனது தடை மூன்று மாதங்கள் நீடிக்கும் என்று கூறியது.

ரஷ்யாவின் எஸ் 7 எயார் லைன்ஸ் தனது பல ஐரோப்பிய இடங்களுக்கான விமானங்களை குறைந்தது மார்ச் 13ஆம் திகதி வரை ரத்து செய்வதாக பேஸ்புக்கில் தெரிவித்துள்ளது.

## பிரித்தானியாவிலுள்ள உக்ரேனியர்களின் உறவினர்கள் நாட்டுக்கு வருவதற்கு அனுமதி



பிரித்தானியாவில் குடியேறிய உக்ரேனியர்களின் உறவினர்கள் பிரித்தானியா வர வந்தால், அவர்களை சேர்த்துக்கொள்ள முடியும் என பிரதமர் பொரிஸ் ஜோன்சன் அறிவித்துள்ளார். உக்ரேனிய கதீட்ரல் சபையில் பேசிய பிரதமர் பொரிஸ் ஜோன்சன், 'உக்ரைனின் தேவை நேரத்தில் பிரித்தானியா எங்கள் முதுகைத் திருப்பாது.

உக்ரைனில் நடந்த மோதலைப் போல நன்மைக்கும் தீமைக்கும் இடையிலான வேறுபாட்டை இவ்வளவு தெளிவாக பார்த்ததில்லை' என கூறினார்.

பிரதமர் பொரிஸ் ஜோன்சன், நாட் டிற்கு மேலும் 4 கோடி பவுண்டுகளை மனி தாபிமான உதவி அறிவித்தார்.

நடந்து வரும் ரஷ்ய படையெடுப்பிற்கு மத்தியில் பிரித்தானியாவில் புகலிடம் தேடும் உக்ரேனியர்களுக்கு விசா விதிகளை தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகளை அரசாங்கம் எதிர்கொள்கிறது. சமீபத்திய அறிவிப்புக்கு முன், ஏற்கனவே பிரித்தானியாவில் உள்ளவர்களை சார்ந்தவர்கள் எனக் கருதப்பட்ட உக்ரேனியர்களுக்கு மட்டுமே நுழைவு உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

## ரஷ்யா - உக்ரேன் பேச்சு முடிவு எட்டப்படவில்லை



ரஷ்யா மற்றும் உக்ரேன் பிரதிநிதிகளுக்கு இடையிலான இந்த சந்திப்பில் இரு நாட்டு பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.

இதைத்தொடர்ந்து இனி வரும் நாட்களில் அடுத்த சுற்று பேச்சு தொடரும் முன்பாக, இரு தரப்பினரும் தத்தமது தாயகத்துக்குச் சென்று மீண்டும் கூட முடிவு செய்துள்ளனர் எனப் பெலாரூஸ் செய்தி நிறுவனமான பெல்டாவின் தகவலை மேற்கோள்காட்டி ராய்ட் டர்ஸ் செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

நேற்றைய பேச்சு விரிவான விவரங்கள் இன்னும் வெளியாகவில்லை. ஆனால் வெளிவரும் தகவல்களின்படி உக்ரேன் தரப்பில் உடனடியாக தாக்குதலை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கை எழுப்பப்பட்டிருக்கிறது.

இதற்கிடையே, உக்ரேன் முழுவதும் உள்ள ரஷ்ய படைகள் உக்ரேனிய தரப்பின் கடுமையான எதிர்வினையை சந்தித்து வருகின்றன.

இதேவேளை, ரஷ்யா உலக நாடுகள் பலவற்றின் பொருளாதார தடைகளுக்கு ஆளாகி பெரிய அளவில் அந்த நாடுகளிடம் இருந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளது

## தலைநகர் கியூவில் மீண்டும் சைரன் ஒலி; பல இடங்களில் குண்டு மழை



உக்ரேன் தலைநகர் கியவில் ரஷ்ய துருப்புகளுக்கும் யுக்ரேனிய படையினருக்கும் இடையே நடக்கும் போரில் பல நகரங்களில் ரஷ்ய படைகள் குண்டுமழை பொழிந்து வருகின்றன.

சேர்னீஹிவில் உள்ள ஸ்விஸ்ட், பி.பி.சியிடம் தனது நகரம் அனைத்துப் பக்கங்களிலிருந்தும் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகி வருவதாகக் கூறினார்.

எல்லா இடங்களிலிருந்தும் நான் வெடிக்கும் சத்தங்களைக் கேட்கிறேன், என்று அவர் கூறுகிறார். அந்த சத்தம் என்னைச் சுற்றி ஒரு வட்டம் போல கேட்கிறது.

இது நான் வசிக்கும் பகுதியில் இருந்து வெகு அருகே கேட்கிறது. அதாவது அந்த இடம் வெகு தொலைவில் இல்லை. அவர்கள் சேர்னீஹிவின் மையப் பகுதியில் குண்டு வீசுகிறார்கள் என்கிறார் 48 வயதான தகவல் தொழில்நுட்ப நிபுணர்.

தனது தாய்நாட்டைக் காக்க ரஷ்ய வீரர்கள் மீது சுட தயாராக இருக்கிறேன் எனவும் அவர் கூறுகிறார்.

ஒவ்வோர் 20 நிமிடங்களுக்கும் வெடிகுண்டு தாக்குதல் சைரன்கள் ஒலிக்கப்படுகின்றன என்று அவர் கூறுகிறார், இனி தப்பி ஓடி பங்கருக்குள் மறைவதற்கு கூட அவகாசம் இல்லை என்கிறார் அவர்.

அப்படி செய்வது இனி சாத்தியமற்றது. யாரும் அதைச் செய்யப்போவதில்லை என்று கூறும் அவர், மாறாக, ஆயுதங்களைப் பெறுவதற்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கின்றனர் என்று தெரிவித்தார்.

இவரது வீட்டிற்கு அருகில் கலாஷ்னிகோவ்ஸ் இயந்திர துப்பாக்கி உட்பட பல ஆயுதங்களைப் பெற மக்கள் கூடும் பகுதி உள்ளதாகவும் அங்கு ஆயுதங்களை வாங்க எல்லா வயதினரும் வருகின்றனர் எனவும் கூறுகிறார் ஸ்விஸ்ட்.

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு





# கொரோனா நான்காவது அலை ஜூன் 22 இல் ஆரம்பமாகுமாம்

## ஆய்வாளர்கள் கணிப்பு

இந்தியாவில் கொரோனா மூன்றாவது அலை ஜனவரி மாதம் தொடங்கியது. தற்போது, அது முடிவை நெருங்கிக் கொண்டிருப்பதாக சுகாதாரத் துறைத் தரவுகள் தெரிவிக்கின்றன.

தென்னாபிரிக்கா, சிம்பாப்வே உள்ளிட்ட சில நாடுகளில் நான்காது அலையும் ஆரம்பமாகிவிட்ட நிலையில், இந்தியாவிலும் நான்காவது அலை ஆரம்பமாகும் வாய்ப்புஉள்ளதாகஉத்தரபிரதேச மாநிலத்தின் கான்பூரில் உள்ள ஐ.ஐ.டி. நிலையத்தின் ஆராய்ச்சியாளர்கள் கணித்துள்ளனர்.

கணிதம் மற்றும் புள்ளியியல் துறையைச் சேர்ந்த சபரா பர்த் ராஜேஷ்பாய், சுப்ரசங்கர் தார், லாப் ஆகியோர் தலைமையில் இந்த ஆய்வு நடந்துள்ளது. இந்தியாவின் கொரோனாத் தரவுகளைப் பயன்படுத்தி, புள்ளியியல் ஆய்வு முறையில் இதை கணித்துள்ளனர்.

இந்தியாவில், முதன்முதலில் கொரோனா தாக்கிய 2020 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் திகதியில் இருந்து 936 நாள்களுக்குப் பின்னர் நான்காவது அலை தொடங்கும் என்று எங்கள் ஆய்வு தெரிவிக்கிறது. அந்தவகையில், வருகிற ஜூன் 22 ஆம் திகதியளவில் இந்தியாவில் அது ஆரம்பிக்கும் என்று எதிர்பார்க்கலாம். ஒகஸ்ட் 23 ஆம் திகதியளவில் அந்த அலை உச்சத்தை எட்டும். ஒக்ரோபர் 24 ஆம் திகதிமட்டில் அது முடிவடையும். அதாவது, 4 மாதங்களுக்கு இந்த அலை நீடிக்கும்.

புதிய உருமாறிய கொரோனா உருவாக வாய்ப்புள்ளதாக உலக சுகாதார அமைப்பு ஏற்கனவே கூறியுள்ளது. எனவே, புதிய உருமாறிய கொரோனா மற்றும் இந்தியாவில் தடுப்பூசி போடப்படும் வேகம் ஆகியவற்றின் அடிப்படையில், நான்காவது அலையின் தீவிரத்தன்மை அமையும். புதிய உருமாறிய கொரோனா பரவும் வேகமும், உயிரிழப்பை ஏற்படுத்தும் வேகமும் அதிகமாக இருந்தால், நான்காவது அலையின் தீவிரமும் அதிகமாக இருக்கும், என்று அந்த ஆய்வாளர்கள் கணித்துள்ளனர்.

இதே ஆராய்ச்சியாளர்கள் தான், பெப்ரவரி 3 ஆம் திகதி, இந்தியாவில் மூன்றாவது அலை உச்சத்தை எட்டும் என்று கணித்து, அது சரியாகவும் அமைந்தது. சிம்பாப்வேயில் ஏற்பட்ட மூன்றாவது அலையின் புள்ளி விவரங்களின் அடிப்படையில் அவர்கள் அதைக் கணித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியர்களை மீட்கும் ஒப்ரேஷன் கங்கா பணியில் விமானப்படையின் விமானங்கள்




ரஷ்யா தொடுத்துள்ள போர் காரணமாக உக்ரைனில் சிக்கித் தவிக்கும் இந்தியர்களை மீட்பதற்காக இந்திய அரசு பல்வேறு தீவிர முயற்சிகளை எடுத்து வருகிறது.

ஒப்ரேஷன் கங்கா என்ற நடவடிக்கை மூலம் உக்ரைனில் சிக்கியுள்ள இந்தியர்களை மீட்கும் செயற்பாடுகளுக்காக இந்திய மத்திய அமைச்சர்கன் உக்ரைனின் அண்டை நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ளனர்.

இந்தத் திட்டத்தில் இந்திய விமானப்படை விமானங்களையும் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும், இன்று முதல் இந்திய விமானப் படையின் சி-17 ரக விமானங்கள் இந்தியர்களை நாட்டுக்குக் கொண்டுவரும் பணியில் இணைய உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

# ஜம்மு — காஷ்மீர் மக்களின் சம்மதமின்றி மாநிலம் பிரிப்பு முன்னாள் முதல்வர் உமர் அப்துல்லா குற்றச்சாட்டு

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுதிய சுயசரிதை புத்தக வெளியீட்டு விழாவில், ஜம்மு காஷ்மீரின் முன்னாள் முதல்வர் உமர் அப்துல்லா கலந்துகொண்டு உரையாற்றியிருந்தார்.

தமிழக முதல்வர் ஸ்டாலினின் உழைப்பை மக்கள் புரிந்துகொண்டுள்ளனர். என்னைப் போல, ஸ்டாலினும் சிறைவாசத்தை அனுபவித்துள்ளார். நாடாளுமன்றம், சட்டமன்றம், உள்ளாட்சித்தேர்தல்எனதொடர்வெற்றிகளைக் குவிக்கிறார் ஸ்டாலின்.

எந்த மதமாக இருந்தாலும், உடை அணிவது என்பது அவரவர் சொந்த விருப்பம். நமது தனித்தன்மையை ஒருபோதும் இழந்து விடக் கூடாது. ஜம்மு காஷ்மீர் மக்களின் குரலைக் கேட்காமல் மாநிலம் பிரிக்கப்பட்டது. மக்களின் ஒப்புதலின்றி ஜம்மு - காஷ்மீர் இரண்டாக பிரிக்கப்பட்டது.

ஆளுநர் தமிழகத்தை மூன்றாகப் பிரித்தால் அதை ஏற்க முடியுமா? ஜம்மு - காஷ்மீரில் தொடங்கியது அங்கேயே முடியவேண்டும். மக்களிடம் பேசுவதற்காகவே ஜம்முவிலிருந்து நான் இங்கு வந்துள்ளேன், என்று தனது உரையில் உமர் அப்துல்லா தெரிவித்திருந்தார்.

# அரசியல் ரீதியாக சந்திக்க தி.மு.க. அரசுக்கு திராணி இல்லை என ஓ.பி.எஸ். விமர்சனம்

சென்னை புழல் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ஜெயக்குமாரை அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் நேற்று சந்தித்திருந்தார். சுமார் அரைமணித்தியாலம் சந்தித்துப் பேசிய பின்னர், சிறை வளாகத்தில் ஊடகவியலாளர்களது கேள்விகளுக்கு பதிலளித்தார் ஓ.பன்னீர் செல்வம்.

அப்போது அவர், நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் கள்ள வாக்குப் போட முயன்ற தி.மு.க. வினரை பிடித்த முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், பொலிஸாரிடம் ஒப்படைத்தார். தி.மு.கவினரை கையும் களவுமாக பிடித்ததால் உண்மைக்கு மாறாக அவரைக் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர். தமிழகத்தில் ஆளும் அரசு பல்வேறு வகையில் அதிகாரத் துஷ்பிரயோகம் செய்து வருகிறது இதற்காக தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. தேனி மாவட்டத்தில் 11 தொகுதிகளில் அ.தி.மு.க. வெற்றிபெற்ற நிலையில், அவர்களைப் பொலிஸார் தி.மு. க.வில் சேர வற்புறுத்துகின்றனர்.

அ.தி.மு.கவின் 50 ஆண்டு காலத்தில் பல போராட்டங்களையும், அச்சுறுத்தல்களையும் சந்தித்து அதில் வெற்றி பெற்றுள்ளது. எந்தவித அச்சுறுத்தல் வந்தாலும் அதனை எதிர்கொள்வோம். கள்ள வாக்குப் போட வந்தவர் மீது வழக்குப் பதியாமல் அதிகாரத்தைக் கையில் வைத்து கொண்டு அரசு அச்சுறுத்தி வருகிறது.

அரசியல் ரீதியாக எம்மைச் சந்திக்க தி.மு.க. அரசுக்கு திராணி இல்லை. ஜெயக்குமார் நலமாகவும் தெம்பாகவும் உள்ளார். எதிர்க்கட்சியை அழித்து விட தி.மு.க. அரசு கங்கணம் கட்டியுள்ளது, என குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார்.

# 13 வயதில் இருந்தே களத்தில் இருப்பவர்ஸ்டாலின் பினராயி விஜயன், உமர் தமது உரைகளில் புகழாரம்

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுடைய சுயசரிதையான உங்களில் ஒருவன் நூலின் முதல் பாகத்தை காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி நேற்று சென்னையில் நடந்த விழாவில் வெளியிட்டார். நூல் வெளியீட்டு விழாவில் கேரள முதலமைச்சர் பினராயி விஜயன், காஷ்மீர் முன்னாள் முதல்வர் உமர் அப்துல்லா, பீகார் மாநில எதிர்க்கட்சித் தலைவர் தேஜஸ்வி, கவிஞர் வைரமுத்து, நடிகர் சத்யராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.





விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய காஷ்மீர் முன்னாள் முதல்வர் உமர் அப்துல்லா, செயலால் மக்கள் மனதில் நிற்பவர் ஸ்டாலின்.13 வயதில் இருந்தே களத்தில் இருப்பவர். உழைக்கும் மக்கள் மு.க.ஸ்டாலினை புரிந்து கொண்டுள்ளனர். மக்களின் மனநிலையை உள்ளாட்சித் தேர்தல் வெளிப்படுத்தியுள்ளது. மு.க.ஸ்டாலினின் சுயசரிதை பல பாகங்கள் தொடர்ந்து வெளிவர வேண்டும். ஜம்மு - காஷ்மீருக்கும் , தமிழகத்திற்கு பல நெருங்கிய தொடர்புகள் உள்ளன.

காஷ்மீருக்காக தமிழகம் குரல் கொடுத்தது. அதற்காகவே நான் இங்கு நிற்கிறேன். தோளோடு, தோளாக நின்றதை நாங்கள் மறக்க மாட்டோம்.

பல கொள்கைகள் இந்தியா முழுவதும் பரவி உள்ளன. வேற்றுமைகள் இருந்தாலும் ஒற்றுமையுடன் இருப்பதுதான் இந்தியாவின் சிறப்பு. தமிழகத்துடனான உறவு பல தலைமுறைகளை கடந்தது, என்று தெரிவித்தார். கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் தனது உரையில், இளைஞரணித் தலைவராக இருந்து மாநிலத்தலைவராக ஸ்டாலின் உயர்ந்துள்ளார். படிப்படியாக முதலமைச்சராக உயர்ந்தவர். கூட்டாட்சிக்கு ஆபத்து வரும்போது முதல் நபராக நிற்பவர் மு.க.ஸ்டாலின். 'உங்களில் ஒருவன்' ஸ்டாலினின் 23 வயது வரையிலான வாழ்க்கையைச் சொல்கிறது. 'உங்களில் ஒருவன்' தமிழ்ச் சமூக வரலாற்றையும் சொல்கிறது, என்று வாழ்த்தினார்.

# திருக்கோயில் தாண்டியடிப் பகுதியில் கல்குவாரிக்கு எதிராக ஆர்ப்பாட்டம்!







(வி.ரி சகாதேவராஜா)

திருக்கோயில் பிரதேசத்திற்குட்பட்ட தாண்டியடி, சங்கமண் கிராமத்தில் கல்குவாரி செயற்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து தாண்டியடி மற்றும் சங்குமண் கிராம பொதுமக்கள் நேற்று திங்கட்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இந்தக் கல்குவாரியால் தாங்களும் தங்கள் பிரதேசங்களும் மிகவும் மோசமாக பாதிக்கப்படும் நிலைமை ஏற்பட்டிருப்பதாக தெரிவித்து, அதனை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தக் கல்குவாரியால் தங்களுக்கு ஏற்பட்ட மோசமான பாதிப்பு தொடர்பாக திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரனிடம் பொதுமக்கள் மூன்று மாதங்களுக்கு முன்பு முறையிட்டனர்.

பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று இதனை இடைநிறுத்துமாறு புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்திற்கு எழுத்து மூலம் அறிவித்தார். இருந்தும் கடந்த மூன்று மாத காலமாக அதனை இடைநிறுத்துவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதேவேளை இவ்வாரம் கல்குவாரி மீண்டும் இயங்கத் தொடங்கியது .

இதனை ஆட்சேபித்தும் உடனடியாக அதை நிறுத்த வேண்டும் என்று கோரியும் தாண்டியடி பொதுமக்கள் நேற்று திங்கட்கிழமை பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அங்கு திருக்கோயில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமூகமளித்து விவரத்தைக் கேட்டறிந்து கொண்டார்.

“திருக்கோயில் பிரதேச செயலாளர் கஜேந்திரனிடம் கேட்டபொழுது ஆர்ப்பாட்டம் நடந்தது உண்மைதான். கல்குவாரியின் செயற்பாட்டை நிறுத்துவதற்கு உத்தரவிட்டிருந்தேன். ஆனால் சுரங்கங்கள் பணியகம் அதனைச் செய்யவில்லை.

“எனவே என்னைச் சந்தித்த பொதுமக்களிடம் மீண்டும் ஒரு முறை அந்தப் பணியிடத்துக்கு நான் ஞாபகம் ஊட்டி கடிதம் எழுதுகிறேன், நீங்கள் ஆர்ப்பாட்டத்தைக் கைவிடுங்கள் என்று கூறியமைக்கு அமைவாக நண்பகல் 12 மணி அளவில் ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.” – என்றார்.



# பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்க கோருகின்றது கல்முனை மாநகரசபை

இலங்கையில் கடந்த 40 வருடங்களுக்கு மேலாக அமுலிலுள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கக் கோரி கல்முனை மாநகர சபையில் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபையின் 47ஆவது மாதாந்த பொதுச் சபை அமர்வு மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் இடம்பெற்றபோதே இப்பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

இப்பிரேரணையை மாநகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான ஹென்றி மகேந்திரன் சமர்ப்பித்திருந்தார். இதனை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினரான சட்டத்தரணி ஆரிகா காரியப்பர் வழிமொழிந்தார்.

இதையடுத்து மாநகர முதல்வர் உட்பட உறுப்பினர்கள் பலரும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் ரத்துச் செய்யப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி கருத்துரைத்தனர். இந்த பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை பயன்படுத்தி எவ்வித குற்றமும் இழைக்காத அப்பாவி தமிழ், முஸ்லிம் இளைஞர்களும், புத்திஜீவிகளும் கைது செய்யப்பட்டு, வருடக்கணக்கில் தடுத்து வைக்கப்பட்டு, துன்புறுத்தப்படுகின்றனர் என்று இதன்போது அவர்களினால் சுட்டிக்காட்டப்பட்டது.

அதேவேளை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் எம்.எஸ்.எம்.நிஸார் இப்பிரேரணைக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்த நிலையில், சபைக்கு சமுகமளித்திருந்த ஏனைய அனைத்து உறுப்பினர்களினதும் ஆதரவுடன் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

# ஊடகவியலாளரைத் தாக்கியவருக்கு 4 ஆம் திகதி வரையில் விளக்கமறியல்

மட்டக்களப்பு வந்தாறுமூலை சந்தைப் பகுதியில் செய்திசேகரிக்கச்சென்றஊடகவியலாளர் இலட்சுமனன் தேவப்பிரதீபன் (நாராயணன்) என்ற ஊடகவியலாளரை தாக்கிய நபரை எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் கட்டளை பிறப்பித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான சந்தேக நபரை ஏறாவூர் பொலிஸார் கைது செய்து களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்றில் நேற்று ஆஜர்படுத்தினார். அப்போதே இந்த உத்தரவு வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்ட ஊடகவியலாளரின் தொலைபேசி தொடர்பான அறிக்கையையும் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து பொலிஸார் செங்கலடி வைத்தியசாலைக்கு வந்து, தமது தொலைபேசியைப் பெற்றுச் சென்றுள்ளனர் என ஊடகவியலாளர் தெரிவித்தார்.

வந்தாறுமூலை சந்தைக்கு முன்னால் உள்ள பிரதான வீதியில் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட பஸ் தரிப்பிடம் நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அகற்றப்பட்டமை தொடர்பாக உறவினர்கள் நியாயம் கேட்டு கடந்த 26 ஆம் திகதி கவனவீர்ப்பு போராட்டத்துக்கான ஆயத்தங்களில் ஈடுபட்டனர்.

இதன்போது தமது தொலைபேசியூடாக வீடியோ எடுக்க முற்பட்ட ஊடகவியலாளர் கிழக்கு பல்கலைக் கழகத்தில் கடமையாற்றும் வே.நந்தகுமார் (கண்ணன்) என்பவரால் தாக்கப்பட்டார் எனக் கூறப்படுகின்றது. தொடர்ந்து நிலைமையை வீடியோ எடுக்க முயன்ற நலன்விரும்பிகளும் தாக்கப்பட்டனர். ஏனைய ஊடகவியலாளர்கள்அதே நபரினால் அச்சுறுத்தப்பட்டனர் என்றும் கூறப்பட்டது.

ஆனால், தாக்குதல் மேற்கொண்டவருக்கும் தங்கள் கட்சிக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லையென இராஜங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் கிரானில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளருக்கு அனுதாபம் தெரிவித்து உரையாற்றும் போது கருத்து தெரிவித்திருந்தார்.

இந்தத் தாக்குதல் தொடர்பில் பல்வேறு ஊடக அமைப்புக்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் கண்டனங்களை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விவசாயிகளுக்கான காப்புறுதி இழப்பீடு; கிழக்கில் மிகத் துரிதமாகக் கொடுப்பனவு



கடந்த 2020 மற்றும் 2021 பெரும் போக வேளாண்மைச் செய்கையின்போது வறட்சி, வெள்ளம் மற்றும் காட்டு யானைகளால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான காப்புறுதி வழங்கி வைக்கும் ஆரம்பக் கட்ட நிகழ்வு நேற்று மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் வவுணதீவு மண்டபத்தடி கமநல சேவை நிலையத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த பெரும்போக செய்கையின் போது பாதிக்கப்பட்ட 9,736 விவசாயிகளுக்கு வளமான நாளை எனும் தொனிப்பொருளிற்கு அமைவாக, கமத்தொழில் அமைச்சின் வழிகாட்டுதலில், கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதி சபையினால் சுமார் 36 கோடியே 19 லட்சம் ரூபா நஷ்டஈட்டுக் கொடுப்பனவாக வழங்கி வைக்கப்படவுள்ளது.

இதற்கமைவாக மட்டக்களப்பு மண்டபத்தடி கமநல சேவை பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் பாதிக்கப்பட்ட சுமார் 217 விவசாயிகளுக்கான கொடுப்பனவிற்கான காசோலைகள் நேற்றுக் காலை 10.30 மணியளவில் வழங்கி வைக்கப்பட்டன.

பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான காசோலையினை வழங்கியிருந்தார்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளுக்கு காப்புறுதிக் கொடுப்பனவாக முற்றாக பாதிக்கப்பட்ட வயல்களுக்கு ஏக்கரிற்கு நாற்பதாயிரம் தொடக்கம் இழப்பீடும், ஏனைய பகுதியளவில் பாதிக்கப்பட்ட வயல்களுக்கு பாதிப்பின் வகைக்கேற்ப இழப்பீடும் காசோலையாக வழங்கி வைக்கப்பட்டது.

காசோலைகளைப் பெற்றுக்கொண்ட விவசாயிகள் தமக்கான நஷ்ட ஈட்டுக் காப்புறுதியை மிக விரைவாகப் பெற்றுக்கொடுத்தமைக்காக இராஜாங்க அமைச்சருக்கும், அரசாங்கத்திற்கும் தமது நன்றியை தெரிவித்திருந்தனர்.

அதேவேளை இன்றைய தினம் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆயித்தியமலை, கரடியனாறு மற்றும் ஏறாவூர்ப்பற்று ஆகிய மூன்று பகுதிகளில் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் அவர்களது பங்கேற்புடன் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான இழப்பீட்டு காப்புறுதித் தொகைக்கான காசோலைகள் வழங்கி வைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வுகளில் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதி சபையின் பணிப்பாளர் பண்டுக வீரசிங்க, கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதி சபையின் தலைவர் ஹசான் திஸ்ஸநாயக்க, கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதி சபையின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் எம்.பாஸ்கரன், மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.ஜெகன்நாத், விவசாய காப்புறுதிச்சபையின் மாவட்ட உயரதிகாரிகள் மற்றும் பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட துறைசார் திணைக்கள அதிகாரிகளும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# சர்வதேச கால்பந்தாட்டப் போட்டிகளில் பங்கேற்க ரஷ்ய அணிக்கு இடைக்காலத் தடை விதிப்பு









உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பையடுத்து, ரஷ்யா மற்றும் அதன் ஆதரவு நாடான பெலாரஸ் ஆகிய நாடுகளின் விளையாட்டு அணிகள் சர்வதேச அளவில் நடைபெறும் அனைத்து விளையாட்டுப் போட்டிகளிலும் பங்கேற்க தடை விதிக்க வேண்டும் என்று, விளையாட்டு அமைப்புகளுக்கு சர்வதேச ஒலிம்பிக் குழு பரிந்துரை செய்துள்ளது.

இந்த நிலையில், ரஷ்யாவின் தேசிய மற்றும் உள்ளூர் கால்பந்து அணிகள் சர்வதேச கால்பந்து போட்டிகளில் பங்கேற்க இடைக்காலத் தடை விதிக்கப்படுவதாக சர்வதேச கால்பந்தாட்டச் சங்கமும் ஐரோப்பிய ஒன்றிய கால்பந்து சங்கமும் கூட்டாக அறிவித்துள்ளன. அடுத்த அறிவிப்பு வரும் வரை இது அமுலில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# விராட்கோலியின் அதிக ஓட்டங்கள் சாதனையை முறியடித்தார் ஸ்ரேயஸ்


3 போட்டிகள் கொண்ட இருதரப்பு ரி-20 தொடர்களில் அதிக ஓட்டங்கள் குவித்த இந்திய வீரர்கள் பட்டியலில் ஸ்ரேயஸ் அய்யர் 204 ஓட்டங்களுடன் முதலிடம் பிடித்துள்ளார்.

இந்தியாவில்சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கைக் கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட ரி-20தொடரில் பங்கேற்றது. 3 போட்டிகளிலும் வெற்றி பெற்ற இந்திய அணி, தொடரை 3-0 என்ற கணக்கில் முழுமையாக வென்றது.

மூன்றாவது போட்டியிலும் சிறப்பாக விளையாடிய ஸ்ரேயஸ் அய்யர் கடைசிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் நின்று 73 ஓட்டங்களைச் சேர்த்து இந்திய அணி வெற்றி பெற காரணமாயிருந்தார். அதுமட்டுமன்றி இந்த தொடரில் நடந்த மூன்று போட்டிகளிலும் இவர் அரைச்சதம் கடந்ததோடு ஆட்டமிழக்காதும் இருந்தார். இறுதி இரு போட்டிகளிலும் ஆட்டநாயகன் விருது வென்ற இவர் தொடர்நாயகன் விருதையும் பெற்றார்.

இருதரப்பு ரி-20 தொடர்களில் தொடர்ச்சியாக 3 முறை அரைச்சதம் அடித்த வீரர் என்ற சாதனையை விராட் கோலியுடன்இவர்பகிர்ந்துகொண்டார். இத்தகைய தொடர்களில் அதிக ஓட்டங்களைக் குவித்த இந்திய வீரர்கள் பட்டியலில் 204 ஓட்டங்களுடன் முதலிடத்தையும் ஸ்ரேயஸ்அய்யர்பிடித்துள்ளார்.

இதற்கு முன்னர் 2016 ஆம் ஆண்டுஆஸ்திரேலிய அணிக்கு எதிராக நடந்த 3 போட்டிகள் கொண்ட இருதரப்பு ரி-20 தொடரில் விராட் கோலி 199 ஓட்டங்களைஅடித்ததே சாதனையாக இருந்தது.



# விராட்கோலியின் நூறாவது டெஸ்ட் போட்டியில் மைதானத்துக்குள் ரசிகர்களுக்கு அனுமதியில்லை

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் முதலாவது போட்டி பஞ்சாப் மாநிலம் மொகாலியில் வருகிற 4 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கிறது.

இது இந்திய அணியின் முன்னாள் தலைவர் விராட்கோலி பங்கேற்கும் நூறாவது டெஸ்ட் போட்டியாகும். இந்த டெஸ்ட் போட்டியை நேரில் காண ரசிகர்களுக்கு அனுமதி வழங்கப்படாது என்று பஞ்சாப் கிரிக்கெட் சங்கம் அறிவித்துள்ளது.

இது குறித்து பஞ்சாப் கிரிக்கெட் சங்க பொருளாளர் ஆர்.பி.சிங்லா தகவல் வழங்குகையில், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அறிவுறுத்தலின்படி டெஸ்ட் போட்டிக்கான பணியில் ஈடுபடுபவர்களைத் தவிர போட்டியை நேரில் காண பொதுவான பார்வையாளர்கள் யாரும் அனுமதிக்கப்படமாட்டார்கள். மொகாலி மற்றும் அதன் சுற்றுப்பகுதியில் கொரோனாத் தொற்று பாதிப்புகள் இன்னும் அதிகமாகவே காணப்படுகின்றன. எனவே ,நாங்கள் கொரோனா தடுப்பு நடைமுறைகள் அனைத்தையும் பின்பற்றி போட்டியை நடத்துவதே நல்லது.

ஏறக்குறைய 3 ஆண்டுக்கு பிறகு மொகாலியில் நடைபெறும் சர்வதேச கிரிக்கெட் போட்டியை நேரில் காணும் வாய்ப்பை ரசிகர்கள் தவறவிடுகிறார்கள்.

அதேவேளை, நூறாவது டெஸ்ட் போட்டியில் விளையாடும் விராட்கோலியின் படங்களைத் தாங்கிய பதாகைகள் மைதானத்தின் சுற்றுப்புறங்களில் வைக்கப்படும். அத்துடன் இந்த போட்டியின்போது விராட்கோலிக்கு பாராட்டு விழா நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது, என்று தெரிவித்திருக்கிறார்.

அதே சமயம் வரும் 12 ஆம் திகதி பெங்களூருவில் தொடங்கவுள்ள தொடரின் இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியை காண மைதானக் கொள்ளளவில் 50 சதவீத ரசிகர்களுக்கு அனுமதி அளிக்க கர்நாடக கிரிக்கெட் சங்கம் முடிவு செய்துள்ளது.

# உலக டென்னிஸ் தரவரிசையில் முதலிடம் பிடித்தார் மெட்வடேவ்



உலக டென்னிஸ் வீரர்களின்புதியதரவரிசைப்பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது. இதன்படிஆண்கள்ஒற்றையர் பிரிவில் இரண்டாவது இடம் வகித்த 26 வயது ரஷ்ய வீரர் டனில் மெட்வடேவ் முதல் முறையாக முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

கடந்த வாரம் நடந்த மெக்சிக்கோ ஓபன் டென்னிஸ் தொடரின் அரையிறுதிக்கு முன்னேறியதன் மூலம் மெட்விடேவ் (8,615 புள்ளிகள்), முதலிடத்தில் இருந்த செர்பியாவின்நோவக்ஜோகோவிச்சை (8,465 புள்ளிகள்) இரண்டாவது இடத்துக்கு தள்ளி முதலிடத்தை தனதாக்கிக் கொண்டார்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# வட-கிழக்கு இணைந்த மாகாண சபை உருவாக்கத்துக்காக உயிர்களை தியாகம் செய்தோரின் கனவு மெய்ப்பட வேண்டும்!

## சிவசக்தி ஆனந்தன் கூறுகிறார்



வடக்கு, கிழக்கு இணைந்த மாகாண சபை உருவாக்கத்துக்காக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தோழர்கள் தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்துள்ளார்கள். அவர்களின் தியாகத்துக்காக அவர்கள் கண்ட கனவு மெய்ப்படவேண்டும்என்றுஅக்கட்சியின் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியில் இதுவரைகாலமும் உயிர் நீத்த அம்பாறை மாவட்டம் காரைதீவு பிரதேசத்தையும் அதன் சுற்றயல் பகுதிகளான சம்மாந்துறை, வீரமுனை, வளத்தாப்பிட்டி, மல்வத்தை, அட்டப்பள்ளம், திராய்க்கேணி கிராமங்களையும் சேர்ந்த தியாகிகளின் குடும்பங்களைக் கௌரவிக்கும் நிகழ்வு காரைதீவு 'லேடி லங்கா' மண்டபத்தில் ஈ.பி.ஆ.ர்.எல்.எவ். கட்சியின் அரசியல் உயர்பீட உறுப்பினர் சின்னையா தோழர் சர்மா தலைமையில் நடைபெற்றது.

அவரது தலைமை உரையில் இந்த நிகழ்வு பகுதி பகுதியாகக் கிராமங்களை உள்ளடக்கி அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்கள் முழுவதும் நடத்தப்படும் என குறிப்பிட்டார்.

அதனைத் தொடர்ந்து உரையாற்றிய சிவசக்தி ஆனந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக வடக்கு - கிழக்கு இணைந்த மாகாண அரசாங்கத்தை முன்னோக்கி கொண்டு செல்வதற்கும் அதனைப் பாதுகாப்பதற்காகவும் பெருந்தொகையான போராளிகள் தங்களது இன்னுயிர்களை ஆகுதி ஆக்கினர். மேலும் 13 இற்கு ஆதரவாகவும் எதிராகவும் பல்வேறு கோணங்களில் கருத்துக்கள் பரிமாறிக்கொண்டு இருக்கக்கூடிய இன்றைய காலகட்டத்தில்வடக்கு, கிழக்குஇணைந்த மாகாண அரசாங்கத்தை வழி நடத்தி சென்ற ஈ.பி.ஆர்.எல்.எவ் தியாகிகளையும் அவர்களது குடும்பங்களையும் கௌர விக்கின்ற நிகழ்வு மிக முக்கியத்து-வம் வாய்ந்த நிகழ்வாகும்.

அதேநேரம், எமது தோழர்கள் அன்றைய காலத்தில் மாகாண சபை முறைமையைப் பொறுப்பெடுத்து அதனைவினைத்திறன்மிக்கதாக வழிநடத்திக் கொண்டு மேலும் முன்னேறிச் செல்வதென்று கனவு கண்டார்கள். அதற்காகவே தமது உயிர்களைத் தியாகம் செய்தார்கள். ஆனால் தற்போது மாகாண சபை முறைமையே கேள்விக்குறியாகியுள்ளது. எனவே, எமது தோழர்களின் கனவு மெய்ப்பட வேண்டும். எமது மக்கள் அமைதியாக, சுதந்திரமாக, சுய நிர்ணயத்துடனாக வாழும் காலம் உருவாக்கப்பட வேண்டும். அதற்காக நாம் அனைவரும் தொடர்ச்சியாக உழைக்க வேண்டும். - என்றார்.

இந்த நிகழ்வில் உயிர் நீத்த தியாகிகளின் படங்களுக்கு அவர்களது உறவுகள் தீபச்சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தியமையுடன், உயிர் நீத்த தியாகிகளின் படம் தாங்கிய நினைவு படங்கள் தோழர்களின் குடும்பங்களுக்குக் கையளிக்கப்பட்டமையுடன் அவர்கள் பொன்னாடை போர்த்தியும் கௌர விக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் முன்னாள் வடக்கு மகாண சபை உறுப்பினர் தியாகராசா மற்றும் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களான புண்ணியநாதன் கரன், நாகராசா சங்கர், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் தோழர் வரதன் கட்சி உறுப்பினர்கள், பொது அமைப்புக்கள், பொது மக்கள்எனப்பலரும்கலந்துகொண்டனர்.

# இலங்கையின் அடையாளமாக திகழ்ந்தார் டக்ஸன் பியூஸ்லஸ்!

## கால்பந்தாட்ட சம்மேளனம் இரங்கல்



மன்னார் மாவட்டம் கால்பந்துக்கு ஒரு புகழ் பெற்ற மாவட்டம். இந்த மாவட்டத்தில் பல கால்பந்தாட்ட வீரர்கள் உருவாகியுள்ளனர். அந்த வகையில் மன்னார் மாவட்டத்தின் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் கல்வி கற்று முக்கிய கால்பந்து வீரராக உருவாகி தனது முயற்சியால் முன்னேறி, தேசிய கால்பந்து அணியின் நிரந்தர தடுப்பு வீரராக மாறியவர் டக்ஸன் பியூஸ்லஸ்.

- இவ்வாறு இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் விடுத்துள்ள உத்தியோகபூர்வ இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு-

விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மூலம் மாலைதீவு கால்பந்தாட்ட சம்மேளனம், மாலைதீவு அரசாங்கம், மாலைதீவு பொலிஸாருடன் தொடர்பு கொண்டு அவரது மரண விசாரணைகளை துரிதப்படுத்துமாறும், அவரின் மரணத்துக்கான உண்மை காரணத்தை கண்டறியுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய மட்டத்தில் சாதிக்க வேண்டும் என்ற கனவு எல்லோர் மனதிலும் இருக்கும். அவ்வாறான ஒரு கனவுடன் உயரப் பறந்த ஒரு குருவி தான் டக்ஸன் பியூஸ்லஸ்.

உள்ளூர் மட்டப் போட்டிகளாக இருந்தாலும் சரி, கழக மட்டப் போட்டிகளாக இருந்தாலும் தன்னை அடையாளப்படுத்திய கால்பந்து வீரன் டக்ஸன் பியூஸ்லஸ்.

1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி மன்னார் பனங்கட்டுகொட்டு கிராமத்தில் பிறந்தவரே டக்ஸன் பியூஸ்லஸ். மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் அவர் தனது கல்வி பயணத்தை ஆரம்பித்தார்.

மன்னார் மாவட்டத்தில் பல கால்பந்தாட்ட வீரர்களையும், ஜம்பவான்களையும் உருவாக்கிய பாடசாலை மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை. தேசிய மட்டத்தில் பல்வேறு சாதனைகளை நிலைநாட்டிய பாடசாலை. அந்த பாடசாலை உருவாக்கிய ஒரு கால்பந்தாட்ட ஜாம்பவான் தான் டக்ஸன் பியூஸ்லஸ்.

பாடசாலைக் காலத்தில் கால்பந்தாட்ட போட்டிகளில் கலந்து கொண்டு பல சாதனைகளை தன்வசப்படுத்தியிருந்தமையுடன், தனக்கான ரசிகர்களையும் தன் பக்கம் ஈர்த்துக் கொண்டார்.

இவர் விளையாடும் கால்பந்தாட்ட போட்டிகளை பார்வையிட ஒரு ரசிகர் பட்டாளமாகவே விளையாட்டு மைதானங்களில் அலைமோதிய வரலாறுகளும் உள்ளன. பல்வேறு கழகங்களுடன் இணைந்து விளையாடி தனது சாதனைகளை நிலை நாட்டியவர் டக்ஸன் பியூஸ்லஸ்.

ஒரு விளையாட்டு வீரனுக்கு அப்பால் சாதனை வீரனாகவும் திகழ்ந் தார். இலங்கை கால்பந்தாட்ட அணி யின் முக்கிய ஒரு புள்ளியாகவும் இவர் திகழ்ந்துள்ளார்.

இலங்கை அணியின் தடுப்புச் சுவராகத் திகழ்ந்து வந்த டக்ஸன் பியூஸ்லஸ் பல்வேறு சாதனைகளை நிலைநாட்டியுள்ளார்.

கால்பந்து உலகக் கிண்ண போட்டியின் தகுதிகாண்போட்டியில் இலங்கை தேசிய அணியில் பங்கேற்று திறமையான ஆட்டத்தை வெளிப்படுத்தி தனது திறமையை அனைவருக்கும் வெளிப்படுத்தியிருந்தார்.

கடந்த வருடம் இந்திய அணியுடன் இடம்பெற்ற போட்டியில் சிறந்த வீரருக்கான விருதினையும் தன் வசப்படுத்திக் கொண்டார்.

குறித்த போட்டி சமநிலையில் நிறைவடைவதற்கு முக்கிய காரணமாக டக்ஸன் பியூஸ்லஸ் திகழ்ந்தார்.

தனது திறமையால் இலங்கை அணியில் இடம் பிடித்த டக்ஸன் பியூஸ்லஸ் மாலைதீவில் ஒரு விளையாட்டு கழகத்துடன் இணைந்து விளையாட அங்கு சென்றார்.

அங்கும் பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு தனது திறமைகளை வெளிப்படுத்தியுள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே தான் எதிர்பாராத விதமாக இவர் மரணமடைந்துள்ளார் எனக் கிடைத்த செய்தி அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. அவரது மரணத்தில் சந்தேகம் உள்ளதாக உறவினர்களும் அவரது நண்பர்களும் கூறுகின்றனர். இவர் தற்கொலை செய்து கொண்டாரா? அல்லது திட்டமிட்ட கொலையா? என்பது குறித்து சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளன எனவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

அவர் தற்கொலை செய்து கொள்ளும் அளவிற்கு கோழையல்லர் என்கின்றனர் அவருக்கு மிகவும் நெருக்கமானவர்கள்.

தற்போது வரை அவரது மரணத்தை மாலைதீவு பொலிஸார் தற்கொலை என அறிவித்திருந்தாலும், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

மன்னார் மாவட்டத்துக்கும், இலங்கை நாட்டுக்கும் சர்வதேச ரீதியில் பெருமை பெற்று தந்த அந்த வீரனின் மரணத்தின் உண்மைத் தன்மை வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதே பலரினதும் கோரிக்கை.

டக்ஸன் பியூஸ்லஸ்சிற்கு நாங்கள் விடை கொடுத்தாலும் அவரின் ஆரம்ப போராட்டம், முயற்சி, அதனூடாக கிடைத்த வெற்றி என்றும் எம் மனதில் இருந்து நீங்கப் போவதில்லை. அவரைப் போன்று இன்னும் மன்னார் மாவட்டத்திலுள்ள வீரர்களை அடையாளம் கண்டு அவர்களின் திறமைகள் வெளிக்கொண்டு வரப்பட வேண்டும். டக்ஸன் பியூஸ்லஸ்சின் இடத்தை நிரப்ப முடியாது விட்டாலும் அவர் பயணித்த பாதையில் எமது வீரர்கள் பயணிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். - என்று உள்ளது.



# நாட்டை மீட்க ஒன்றிணைக!

## கரு அழைப்பு

தற்போது எதிர்கொண்டுள்ள பாரதூரமான நிலைமையில் இருந்து நாட்டை மீட்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய அழைப்பு விடுத்துள்ளார்.

அனைத்து அரசியல் தலைவர்களும் கொள்கை ரீதியிலான இணக்கப்பாட்டுக்கு வந்தாலே நாட்டை கட்டியெழுப்ப முடியும் என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அவர், இன,மத பேதங்களை ஏற்படுத்த மிகவும் சிறியதொரு குழு முயற்சிக்கின்றது என்றும் குற்றம் சாட்டினார்.

இருப்பினும் அதற்கு இடமளிக்காமல் இன, மத ஐக்கியத்தைக் கட்டியெழுப்ப அரசியல் தலைவர்கள் உட்பட இலங்கை மக்களிடம் கேட்டுக்கொண்டார்.

உலகில் தனித்து செயற்பட முடியாது என சுட்டிக் காட்டிய முன்னாள் சபாநாயகர், சர்வதேசத்தின் நம்பிக்கை மற்றும் கௌரவத்தை நாம் சம்பாதித்துக் கொள்ளவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

# அரச ஊழியர்களின் வேலைநாள் நான்காகக் குறைக்கப்படலாம்?

எரிபொருள் நெருக்கடியைக் கவனத்தில் கொண்டு அரச ஊழியர்கள் வாரத்தில் வேலைநாள்களை நான்கு தினங்களாக குறைத்து வேலைசெய்வதற்கும், மணித்தியாலத்தை அதிகரிப்பதற்கும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி ஆளுநரால் அரசாங்கத்துக்கு இந்த யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய காலை 7.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை வேலை நேரத்தை முன்னெடுத்துச் செல்லும் வகையில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. நிறுவனங்களிலிருந்து வேலைசெய்யும் பணியாளர் காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை தமது பணிகளை மேற்கொண்டு நேரகாலத்தோடு வீடுகளுக்குச் செல்ல சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் எனவும் மத்திய வங்கி அந்த யோசனையில் சுட்டிக்காட்டியுள்ளது. மேலும் தனியார் வாகன பாவனையைக் குறைத்து பொதுப் போக்குவரத்துக்களை முடிந்தளவு பயன்படுத்துமாறும் மத்திய வங்கி கேட்டுக்கொண்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.03.2022இல் வெளியிடப்பெற்றது.